# DEPOSITION OF WITNESS

## Chapter XXIII Code of Criminal Procedure

## In the Court of Judicial Magistrate No. II, Usilampatti

## CC.No. 490/2014

## Deposition of Witness for PW10

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | திலகராணி | Caste | : |
| Father/Husband Name | : | அழகர்சாமி | Calling | : |
| Village | : | | Religion | : |
| Taluk | : | | Age | : |

(A3, A4, A5 absent, Petition filed and allowed, A4, A6 – died, A1, A2 present)

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 08.07.2026**

**முதல் விசாரணை**

நான் செக்காணூரனி காவல் நிலைய வட்ட காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். காவல் ஆய்வாளர் சுகுமார் தற்போது பணிமாறுதலாகி சென்றுவிட்டதால், நான் அவருக்கு பதிலாக ஆவணங்களை பார்த்து சாட்சியம் அளிக்கிறேன். காவல் ஆய்வாளர் சுகுமார் இவ்வழக்கை 01.07.2013ம் தேதி விசாரணைக்கு எடுத்துக்கொண்டு கொக்குளம் கிராம நிர்வாக அலுவலர் சேதுராமன் மற்றும் சின்னன், கிராம உதவியாளர் ஆகியோர்கள் முன்னிலையில் அன்றைய தினம் 10.00 மணிக்கு பன்னியான் விலக்கில் வைத்து வழக்கின் எதிரி வையக்காட்டுசாமி என்பவரை கைது செய்து மேற்படி சாட்சிகளின் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் 01.07.2013ம் தேதி 16.30 மணிக்கு ஈரோடு மாவட்டம், சூரம்பட்டி நான்கு ரோடு அருகில் TN 09 AD 0142 என்ற எண் கொண்டு மாருதி ஆம்னி காரை போலீஸ் சாட்சிகளான தலைமை காவலர் பாஸ்கரன், மாயக்கண்ணன் ஆகியோர்கள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றியுள்ளார். அந்த அத்தாட்சி ஏற்கனவே அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் எதிரியை தக்க வழிகாவலுடன் காவல்அடைப்பிற்கு அனுப்பி வைத்துள்ளார். பின்னர் சாட்சிகள் சேதுராமன், சின்னன், பாஸ்கரன், மாயகண்ணன் ஆகியோர்களை விசாரித்து 161(3) வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் படிவம்

95ன் மூலம் மேற்படி வாகனத்தை நீதிமன்றத்தில் ஆஜர் செய்துள்ளார். அந்த படிவம் 95 **அ.சா.ஆ.15** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் அன்றைய தினமே வழக்கின் சட்டப்பிரிவினை 4 (1) (aaa) of TNP Act உடனினைந்த 41(2), 102 சிஆர்பிசியிலிருந்து 4 (1) (aaa) of TNP Act உடனினைந்த 41(2), 102 சிஆர்பிசி மற்றும் 379 இ.த.ச வின் கீழ் சட்டப்பிரிவு மாறுதல் செய்து சட்டபிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்துள்ளார். மேற்படி சட்டபிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.16** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் மற்ற எதிரிகளை தேடி வந்த நிலையில் 08.07.2013ம் தேதி 14.00 மணிக்கு எதிரி நாகராஜன் என்பவரை பன்னியான் பள்ளிக்கூடம் அருகே கைது செய்து முதலைக்குளம் கிராம நிர்வாக அலுவலர் சசிக்குமார் மற்றும் கிராம உதவியாளர் பெரியகருப்பன் ஆகியோர்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றுள்ளார். பின்னர் எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். கைப்பற்றிய சொத்துக்களை நீதிமன்றத்தில் ஒப்படைத்து ஆர்பிஆர் எண் பெற்றும், முதல் விசாரணை செய்த சார்பு ஆய்வாளர் ரவியை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். 03.09.2013ம் தேதி இவ்வழக்கின் விசாரணை முடித்து எதிரிகள் மீது சட்டபிரிவுகள் 4 (1) (aaa) of TNP Act உடனினைந்த 41(2), 102 சிஆர்பிசி மற்றும் 379 இ.த.ச வின் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

## எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

புகார்தாரர் எங்கள் காவல் நிலையத்தில் பணிபுரிந்த சார்பு ஆய்வாளர் ரவி என்றால் சரிதான். சார்பு ஆய்வாளர் தனியறிக்கை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி புகார்தாரர் ரோந்து பணியில் சென்றதாகவும், 16.06.2013ம் தேதி எதிரிகள் 5 மற்றும் 6 ஆகியோர்களை கைது செய்ததாகவும், வாக்குமூலம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். இவ்வழக்கின் சாட்சி பட்டியலில் ஒப்புதல் வாக்கு மூலம் மற்றும் அத்தாட்சி சாட்சிகள் அனைவரும் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் கிராம உதவியாளர் மற்றும் காவலர்கள் என்றால் சரிதான். அத்தாட்சியில் 16.06.2013ம் தேதியும், 01.07.2013ம் தேதியும் வழக்கு சொத்தை கைப்பற்றியதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். இறுதியறிக்கையில் மேற்படி 2வது அத்தாட்சி, முதல் அத்தாட்சியிலிருந்து 15 நாட்கள் கழித்து தயார் செய்யப்பட்டதற்கு காரணம் எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். மதுபாட்டில்கள் திருடுபோனதாக யாரும் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். தமிழக அரசால் மதுபானக்கடைகள் ஏலம் விடப்பட்டு, விற்பனை செய்வது நடைமுறையில் உள்ளது என்றால் சரிதான்.

அதேபோல் சட்டப்படி வயது வந்த எவரும் மது பாட்டில்களை வாங்குவதற்கும், குடிப்பதற்கும் உரிமையுள்ளது என்றால் சரிதான். சட்டப்படி ஒரு நபர் குறைந்த அளவில் மதுபாட்டில்கள் வாங்க வேண்டும். எதிரிகளை மதுபாட்டில்களுடன் கைது செய்து அத்தாட்சி தயார் செய்யும்போது வழக்கில் சொல்லப்பட்ட சொத்துக்களான பாட்டில்களை புகைப்படம் எதுவும் எடுக்கப்படவில்லை என்றால் சரிதான். கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் இடங்களான பல்லடம், ஈரோடு போன்ற இடங்களில் வசிக்கும் தனிநபர்களை இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். வழக்கின் சம்பவ நடந்ததாக காட்டப்படும் பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயாரித்து தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். புள்ளிவிவர கணக்கிற்காக மதுபான கடைக்காரர்களிடமிருந்தும், பல வழக்குகளில் பிடிப்பட்டவர்களிடமிருந்தும் பெறப்பட்ட மதுபாட்டில்களை வைத்து இந்த எதிரிகள் மீது குற்றங்கள் செய்ததாக பொய்யாக போடப்பட்ட வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. குவிமுச பிரிவு 157 (1)ன் கீழ் இந்த வழக்கு பதிவு செய்யப்பட்ட பிறகு சம்பவம் இடம் சென்று, பார்வை மகசர் தயார் செய்து மற்ற சான்று பொருட்கள் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல.